**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. No. 58/2024**

**வாக்குமூலம்: வா.சா.2 – சண்முககுமார்**
**18.04.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அத்தையின் கணவர் ஆவார். 1ஆம் பிரதிவாதி எனக்கு உறவு முறை என்றால் எனது அத்தை ஆவார். 1 ஆம் பிரதிவாதி எப்பொழுதிருந்து தாவா வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால் சுமார் 8 வருடங்களாக குடியிருந்து வருகிறார். எந்த வருடத்தில் வாதி தாவா வீட்டைக் கட்டினார் என்றால் சுமார் வீட்டைக்கட்டி 9 வருடங்கள் இருக்கும். அதற்கு முன்பு காலியிடமாக இருந்தது என்றால் சரிதான். காலியிடத்தில் குடிசை இருந்ததா என்றால் காலியிடத்தில் மாட்டுக்கொட்டகை இருந்தது. பழனியம்மாள் வாதி தாவா இடத்தில் வீடு கட்டுவதற்கு முன்பிருந்து குடிசை போட்டு குடியிருந்து வந்தார் என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது.

2. தாவா வீட்டை 1ஆம் பிரதிவாதி தான் கட்டியுள்ளார் என்றாலும், வாதி தாவா வீட்டை கட்டவில்லை என்றாலும் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் இருந்தே தாவா இடத்தில் குடிசை அமைத்து வீடு கட்டி தற்போது வரை குடியிருந்து வருகிறார் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. வாதி அந்த இடத்தை கிரையம் செய்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதிக்கும், 1ஆம் பிரதிவாதிக்கும் என்ன உறவு என்றால் கொழுந்தியா ஆகும். வாதிக்கும் 1ஆம் பிரதிவாதிக்கும் இடையே உள்ள உறவு காரணமாக 1ஆம் பிரதிவாதியை தாவா இடத்தில் குடிசை அமைத்து அனுபவத்தில் இருக்க வாதி அனுமதித்துள்ளார் என்றாலும், அதன் படி 1ஆம் பிரதிவாதி தாவா இடத்தில் சுமார் 10 லட்சம் செலவு செய்து வீடு கட்டியுள்ளார் என்றாலும் சரியல்ல.

3. வாதி அனுமதியை ரத்து செய்தார் என்று நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன், எந்த தேதியிலிருந்து ரத்து செய்தார்கள் என்றால் சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ரத்து செய்து விட்டார்கள். நிரூபண வாக்குமூலத்தில் சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ரத்து செய்து விட்டார்கள் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் எனக்குத் தெரியாது. 1ஆம் பிரதிவாதி தனது கணவரிடம் இருந்து பிரிந்து தனியாக வசித்து வருகிறார் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது.

1 ஆம் பிரதிவாதி தாவா வீட்டை 2 மாதங்களுக்குள் காலி செய்து தருவதாக சொன்னாரா என்றால் இல்லை. 1 ஆம் பிரதிவாதி தாவா வீட்டை காலி செய்ய 2 மாத கால அவகாசம் கேட்டார் என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லி விட்டு தற்போது இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி தான் தாவா வீட்டை கட்டி தற்போது வரை அதில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.